புதுச்சேரி அரசு

## எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை

*விலைப்புள்ளி அறிவிப்பு*

புதுச்சேரி அரசு, எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை சேமித்து வைத்திருக்கும் (1) கழிவுத்தாள்கள் மற்றும் அட்டைத் துண்டுகள், (2) சாக்கு மற்றும் கித்தான் பைகள் 'எங்கு எந்த நிலையில் உள்ளதோ-அங்கு அந்த நிலையில்' வாங்குவதற்கும், **01.11.2011 முதல் 31.10.2012** முடியும் ஓராண்டு காலம் வரை ஏலம் எடுக்கவும், விலை விகிதம் கிலோகிராம் விகிதத்தில் தனித்தனியே குறிப்பிட்டும், முத்திரையிடப்பட்ட விலைப்புள்ளிகள் கோரப்படுகின்றன.

2. மூடி முத்திரையிடப்பட்ட விலைப்புள்ளிகள் வெள்ளைத் தாளில் தெளிவாக எழுதப்பட்டு இந்திய அரசுடைமையாக்கப்பட்ட வங்கியில் பிணைத் தொகையாக ரூ. 20,000 (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) செலுத்தி Banker's Cheque in favour of Senior Accounts Officer or Deposit at Call ரசீதினை இணைத்து, கீழே கையொப்பமிட்டு **28.10.2011 அன்று மாலை 3.00 மணிக்குள்ளாக** புதுச்சேரி, தட்டாஞ்சாவடியில் உள்ள எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறைக்கு வந்தடையுமாறு அனுப்பி வைக்கப்பட வேண்டும். அன்றைய தினமே மாலை 3.30 மணிக்கு விலைப்புள்ளிகள் ஏலதாரர் அல்லது அவரால் நியமிக்கப்பட்டவர் முன்னிலையில் பிரிக்கப்படும். மேலுறையில் 'கழிவுத்தாள்களுக்கான விலைப்புள்ளி' என்று குறிப்பிட்டிருக்க வேண்டும். மேலும் ஏற்கெனவே செலுத்திய பிணைத் தொகையோ அல்லது இந்த அலுவலகத்திலிருந்து தரப்பட வேண்டிய தொகையோ இந்த விலைப்புள்ளிக்குப் பிணைத் தொகையாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

3. ஒப்பந்ததாரர் தாம் குறிப்பிடும் விலையை விற்பனை வரி நீங்கலாக எண்ணாலும், எழுத்தாலும் குறிப்பிட வேண்டும். ஒப்பந்தப் பொருட்களை எடுக்கும் தேதியில் இருக்கும் சட்டத்தின்படி விற்பனை வரி வசூலிக்கப்படும்.

4. இதன் கீழ்க்கண்டவருக்குக் காரணம் ஏதும் கூறாமல் எந்த ஒரு விலைப்புள்ளியையும் அல்லது அனைத்து விலைப்புள்ளிகளையும் ஏற்கவோ அல்லது தள்ளுபடி செய்யவோ உரிமை உண்டு.

புதுச்சேரி, 2011 ஆம் செப்டம்பர் மீ 19 வ

K. குமாரக்கிருஷ்ணன்,
**இயக்குநர்**

---

online publication at "http://styandptg.puducherry.gov.in"
Government Central Press
Directorate of Stationery and Printing
Puducherry -9